# கடை - கூடாரம் - எரிவாயு தோம்பு ஆகியவை மீது சீல் வைக்கப்பட்டது



கோலாலம்பூர், அக். 20-

கோலாலம்பூர் மாநகர் மன்றம் இங்கு புக்கிட் பிந்தாங் ஜாலான் இம்பி சாலைப் பகுதியில் அமைந்துள்ள கடைகள் மீது சோதனை நடவடிக்கையின்போது கடை, கூடாரம், எரிவாயு தோம்பு ஆகிய வியாபாரிகளின் பொருட்கள் மீது சீல் வைக்கப்பட்டன.

கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் அமலாக்க இலாகா மற்றும் புக்கிட் பிந்தாங் கிளை ஆகிய தரப்பினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போது பல பொருட்களுக்கு சீல் வைக்கப்பட்டன.

சாலை போக்குவரத்திற்கு இடையூறாக இருந்தவை நீக்கப்பட்டன. 1974ஆம் ஆண்டு கால்வாய் சாலை மற்றும் கட்டட சட்டத்தின் 46(1) பிரிவின் கீழ் இத்தகைய பிரத்தியேக சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சீல் வைக்கப்பட்ட பொருட்கள் மற்றும் கருவிகள் எல்லாம் செராஸ், தாமான் மிஹார்ஜா ஜாலான் லோம்போங்கில் உள்ள சீல் வைக்கும் கிடங்கிற்கு அனுப்பப்பட்டுள்ளதாக கோலாலம்பூர் மாநகர் மன்றம் ஓர் அறிக்கையில் தெரிவித்தது.

கோலாலம்பூர் மாநகரில் உள்ள நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கை 11. அப்பகுதிகளில் தொடர்ச்சியாக அடுக்கடுக்காக கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் என்று இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.